# *புனித ஸ்தனிஸ்லாஸ் (1030-1073)*

இவர் பின்னர் அடைய இருந்த புனிதத் தன்மைக்கு இளம்வயதிலேயே அடிக்கல் நாட்டப்பட்டது என்று சொல்லலாம். இவர் தம் நாட்டின் பள்ளிகளில் கல்வி பயின்ற பின் பாரிஸ் நகரில் 7 ஆண்டுகளாக கல்வி கற்றார். இவர் தாழ்த்தி மிகுந்தவராகையால் அறிஞர் பட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார். பெற்றோர் இறந்ததும் உடைமைகள் அனைத்தையும் விற்று ஏழைகளுக்கு வழங்கி விட்டு குருப்பட்டம் பெற்றார். உயர்ந்த பதவி இவருக்கு கொடுக்கப்பட்டது. பின்னர் இவர் ஊர் ஊராகச்சென்று வேதம் போதித்தார். இறுதியாக இவரை ஆயராகத் தேர்ந்தெடுத்தார்கள். பாவ வாழ்வு நடத்தி வந்த மன்னனை தனியாக அழைத்து கடித்து கொண்டார்! மனந்திரும்பிதாக முதலில் காணப்பட்டான். பின்னர் இன்னும் மோசமான வாழ்வு நடத்தினான். நம் புனிதர் நெடுநாள் பொறுமையாக இருந்தபின் மன்னனை திருச்சபைக்குப் புறம்பாக்கினார். அரசன் இவரைக் கொல்ல தீர்மானித்து, அவர் இருந்த சிற்றாலயத்தில் நுழைந்தான். அவரைக் கொல்லும்படி வேலையாட்களுக்கு கட்டளை பிறப்பித்தான். அவர்கள் மறுத்தனர். அரசனே அவரைக் கொன்றான்.

**சிந்தனை:**

"தாய், தந்தையரும், பெரியோர்களும் தங்களின் பிள்ளைகளையும் தங்களைச் சார்ந்தவர்களையும் காப்பாற்ற வேண்டும். போதிக்க வேண்டும். திருத்த வேண்டும்". (புனித தெலசால் அருளப்பர்)

**செபம்:**

ஆண்டவரே, புனித ஸ்தனிஸ்லாஸ் போன்ற ஆயர்களையும், குருக்களையும் திருச்சபைக்கு தாரும்.